DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 185/2014
****

Deposition of Witness for : DW2

Name : முத்துப்பாண்டி

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 06.03.2026

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மேலநீலிதநல்லூர் கிராமத்தில் பத்திர எழுத்தராக அலுவலகம் வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வரவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **பி.வா.சா.ஆ.16** ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணம் வடக்கு பனவடலி கிராமத்தை சேர்ந்த கண்ணப்ப தேவர் மனைவி ஆவுடையம்மாள் என்பவர் என்னிடம் தகவல் சொல்லி இந்த ஆவணத்தை நான் வரைவு செய்து உள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தெற்கு பனவடலி கிராமத்தை சேர்ந்த வெளியப்ப தேவர் குமாரர் வேலுச்சாமி தேவர், மேலநீலிதநல்லூர் கிராமத்தை சேர்ந்த அழகையா தேவர் மகன் மாடசாமி ஆகியோார்கள் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்த பின்பு அந்த ஆவணத்தை ஆவுடையம்மாளுக்கு நான் வாசித்து காண்பித்தேன். அப்போது அவர் அதை தெரிந்து சரி என்று சொன்னார்கள்.

அதன் பின்னர் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆவுடையம்மாள் என் முன்புக்கும், ஆவணத்தில் கண்ட ஆவண சாட்சிகள் முன்புக்கும் கைரேகை வைத்தார். அந்த கைரேகையை நான்தான் ஆவணத்தில் பதிவு செய்தேன். அதன் பின்னர் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் வேலுச்சாமி தேவர், மாடசாமி தேவர் கையொபபம் செய்தார்கள். சாட்சி மாடசாமி என்பவர் எனக்கு அத்தான் உறவு முறை வேண்டும். அவரும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். மேற்படி சாட்சிகளின் கையொப்பம் அவர் எனக்கு உறவுக்காரர் என்பதாலும், பக்கத்து வீட்டுக்காரர் என்பதாலும், என் முன்புக்கு கையொப்பம் செய்ததாலும் எனக்கு தெரியும். வேலுச்சாமி தேவர் என்பவர் எனக்கு பரிட்சயமானவர். அவர் எனது அலுவலகத்திற்கு 5,6 முறை அவரின் சொத்துக்களுக்கு ஆவணம் பதிவு செய்ய என்னை அணுகி உள்ளார். அதன் மூலம் அவரின் கையொப்பமும் எனக்கு தெரியும். மேற்படிசாட்சிகள் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யும் போது நானும், ஆவுடையம்மாளும் உடன் இருந்து பார்த்தோம் எங்கள் முன்புக்கு செய்தார்கள். சாட்சிகள் கையொப்பமிட்டதை நானும், ஆவுடையம்மாளும் பார்த்தோம். மேற்படி ஆவணத்தில் ஆவுடையம்மாளும், சாட்சிகளும் என் முன்புக்கு கையொப்பமிட்டு பிறப்பித்துக் கொடுத்த பின்பு அதில் இறுதியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வேலுச்சாமி தேவர் முதலாவதாக கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் கையெழுத்து அவருடையது தான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாடசாமி தேவர் இரண்டாவதாக கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் கையெழுத்து அவருடையது தான். அதன் பின்பு மேற்படி உயில் ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்ய ஆவுடையம்மாளிடம் கொடுத்து பதிவுக்கு அனுப்பினேன். 18.11.2004 ல் மேற்படி ஆவணத்தை பதிவுக்கு கொடுத்து பதிவு செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்வதற்கு 17.11.2004 ல் ஆவுடையம்மாள் என்னை அனுகினார். 17.11.2004 ல் அவருக்கு உரிமை மூலம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை குறித்து தயார் செய்ய சொன்னார். நான் அவரிடம் 18.11.2004 ல் வாருங்கள் நான் தயார் செய்து வைத்திருக்கிறேன் என்று கூறினேன். இந்த ஆவணத்தில் ஆவுடையம்மமாளும், சாட்சிகளும் கையெழுத்துசெய்தது 18.11.2004 ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது அலுவலகத்தில்

18.11.2004 ல் கையொப்பமிட்டு பிறப்பிக்கப்பட்டது. ஆவணத்தில் கண்ட சாட்சிகள் தற்போது வேலுச்சாமி மற்றும் மாடசாமி ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். இந்த பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஆவுடையம்மாள் சொன்னதின் பேரில் மருதாத்தாள் என்பவரின் பெயரில் தயாரிக்கப்பட்டது.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.